மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரண கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் வருடம் ஜனவரி மாதம் 31-ந் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.கு.அசோக்குமார், பி.காம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் பரப்பும் ஏடீஸ் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுக்கும் வகையில், மேற்படி, கொசுக்களை உற்பத்தி ஆகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், தண்ணீர் தொட்டிகளில் அபேட் மருந்து மூலம் கொசுப்புழுக்களை அழித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. முதல் கட்டமாக 01.08.2017 முதல் கொசு ஒழிப்பு பணி மற்றும் அபேட் மருந்து தண்ணீர் தேங்கி உள்ள இடங்களில் தெளிக்கும் பணியினை 30 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களை கொண்டு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்திரவில் கூறப்பட்ட தினக்கூலி ரூ.205/- என்ற அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

   அலுவலகக்குறிப்பு:

   1) மன்றம் அனுமதிக்கலாம்.
   2) 2017-18-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
   3) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

   (ந.க.எண்:1438/2016/எச்1)

2. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:15, அணைக்கட்ரோடு தேவதான சாலையை சார்ந்த குளம் நீர் பிடிப்பு பகுதியை தனக்கு சொந்தமானது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்:W.P.No:1869/2017-ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. நகராட்சி சார்பாக மேற்படி, வழக்கினை எதிர்த்து வாதாடுவதற்கு திரு.E.மனோகரன், வழக்கறிஞர் அவர்களிடம் வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/-யை வழங்க கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

   அலுவலகக்குறிப்பு:

   1)மன்றம் அனுமதிக்கலாம்.

   2)அவசரஅவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/- வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

   (ந.க.எண்: /2018/எப்1)

3. நகரமன்ற தீர்மானம் எண்:230, நாள்:13.08.2015-ன்படி, இந்நகராட்சியின் வார்டு எண்:2, 3, 4, 5, 9, 10,13, 14 மற்றும் 19 ஆகிய 9 வார்டுகளில் அடங்கும் இணைப்பில் கண்டுள்ள தெருக்களில் கால்வாய் சுத்தம் செய்தல், சாலைகளை பெருக்குதல், குப்பைகள் அள்ளுதல், சேகரிக்கும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து நகராட்சி நிர்வாகம் சொல்லும் இடத்திற்கு கொண்டு வந்து சேர்த்தல், கொசு மருந்து தெளித்தல், வாகனங்களால் சாலையோரங்களில் ஏற்படும் புழுதி மண் அகற்றுதல், பொது கழிப்பறைகள் சுத்தம் செய்தல், பூங்காக்கள் சுத்தம் செய்தல், தினசரி காய்கறி மார்க்கெட், பழ மார்க்கெட், மீன் இறைச்சி கடைகள் சுத்தம் செய்தல் மற்றும் கிருமி நாசினி தெளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள 01.09.2017 முதல் 31.08.2018 வரை மூன்றாம் ஆண்டு காலத்திற்கு ஒரு நபருக்கு ரு.406.92 வீதம் தனியார் துப்புரவு பணியாளர்கள் 35 நபர்கள் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் தனிஅலுவலரின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

3)அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று 01.09.2017 முதல் 31.08.2018 வரை தனியார் துப்புரவு பணியாளாருக்கு தொகையினை வழங்கவும் அதற்கான தோராய செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:1238/2015/எச்1)

4. இந்நகராட்சி வார்டுகள் மறுவரையறைப் படுத்திடவும் மறுசீரமைப்பு செய்யும் பணிக்கு (Delimitation) வார்டு மறுவரையறை செய்த எல்லை வரைபடம் மற்றும் வார்டுகள் தனித்தனியாக வரைபடங்கள் மற்றும் ஒட்டு மொத்த வரைபடம் ஆகியன ATO CAD-ல் தயார் செய்து அதனை கலர் Print எடுத்து வழங்கிட அதற்கான விலைப்புள்ளி, கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | வார்டு வரைபடம் ரு | நகர வரைபடம் ரு | A2 size கலர் பிரிண்ட் ரு | A3 size கலர் பிரிண்ட் ரு |
|---|---|---|---|---|---|
| 1 | ஜி.பி.பில்டர்ஸ், நெ:9,டிரங்க்ரோடு, வாலாஜாபேட்டை | 650/- | 5400/- | 350/- | 200/- |
| 2 | எம்.மாதவன், நெ:48, பஜார் தெரு, வாலாஜாபேட்டை. | 500/- | 5000/- | 250/- | 100/- |
| 3 | ஜெய்சங்கர், நெ:8/1, சுவாதிநகர் ஆற்காடு. | 600/- | 5500/- | 300/- | 150/- |

மேற்படி, வரப்பெற்றுள்ள 3 விலைப்புள்ளிகளில் வரிசை எண்:2-ல் கண்டுள்ள எம்.மாதவன், நெ:48, பஜார் தெரு, வாலாஜாபேட்டை என்பவர் விலைப்புள்ளியில் அனைத்து பணிகளுக்கும் மற்ற இரண்டு விலைப்புள்ளியை காட்டிலும் குறைவாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வரிசை எண்:2-ல் கண்டுள்ள திரு.எம்.மாதவன் என்பவர் விலைப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.மாதவன் என்பவரது விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளலாம்.

2)வார்டு மறுவரையறை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்:2294/2017/எப்1)

5. இந்நகராட்சியின் ஆண்டு பங்களிப்பாக TNIUS, கோயம்புத்தூர், TAMIL NADU OF INSTITUTE URBAN STUDIES-க்கு ரூ.20,000/- செலுத்த வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களிடம் கடிதம் வரப்பெற்றுள்ளது, மேற்படி, தொகையினை TAMIL NADU INSTITUTE OF URBAN STUIES-க்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்,
2)மேற்படி, தொகையினை 2017-18-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலுத்துவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் தொகை ரூ.20,000/- செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:1431/2014/சி1)

6. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள வாகனங்கள் 1)டம்பர் பிளேசர் லாரி எண்:TN73D6289, 2) டம்பர் பிளேசர் லாரி எண்:TN73D6249,3)டிப்பர் லாரி எண்: TN73D6260-க்கு ஹைட்ராலிக் ஆயில் தேவைப்படுவதால், ஹைட்ராலிக் ஆயில் 50 லிட்டர் வாங்க தோராய செலவினம் ரூ.14000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி, செலவினத்தை 2017-18-ம் வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோர நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

7. வாலாஜாபேட்டை நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவுக்கு டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பர நோட்டீஸ் 10,000 எண்ணிக்கை தேவைப்படுவதால், வீடு வீடாக சென்று டெங்கு கொசு ஒழிப்பு விளம்பர நோட்டீஸ் வழங்கவும், அச்சடித்து வழங்க தோராய செலவினம் ரூ.42000/-க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி, நோட்டீஸ் அச்சடித்து வழங்க விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்: /2017/எச்1)

8. மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ2/0735/2017, நாள்.09.01.2018-ல் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் தொகை ரூ.5.50 இலட்சம் மதீப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06ல் ஏகாம்பரநாதர் கோயில் குளக்கரை மழைநீர்வடிகால்வாய் மற்றும் கல்வெர்ட் அமைக்கும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து செயல்முறை உத்திரவு வரப்பெற்றுள்ளது. இக்கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டி வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ஆம் ஆண்டு நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்:-3075/2017/இ1.

9. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தினந்தோறும் குடிநீர் வழங்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து பகுதிகளில் உள்ள SUMP, OVER HEAD TANK, WATER DISTRIBUTION MAIN LINE, PUMPING MAIN LINE CWSS PIPE LINE, CHLORINATION UNIT (HYPO CHLORIDE) மற்றும் HEAD HOUSE இவை அனைத்தும் விவரிக்கும் வகையில் அடங்கிய வரைபடம் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் முன்னிலையில் சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ள தெரிவிக்கப்பட்டதின் பேரில் அனைத்து வரைபடங்களும் PRIVATE COMPUTER CAD Center-ல் தயார் செய்து அறிக்கை சமர்ப்பித்திட ஆகும் தோராய செலவீனத் தொகை ரூ.50000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2017-18ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்:-2786/2017/இ1.

10. மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ2/0735/2017, நாள்.25.11.2017-ல் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் தொகை ரூ.9.00 இலட்சம் மதீப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புட்டாளம்மன் கோயில் முதல் ஏகாம்பரநாதர் கோயில் குளக்கரை வரை கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு 09.01.2018-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சாரதி பில்டர்ஸ்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை, | 0.05%<br>(மதிப்பீடு விகிதத்தை விட குறைவு) |
| 2. | திரு.R.பாஸ்கரன்<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை, | 0.38%<br>(மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்) |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்:1ல் உள்ள ஸ்ரீ சாரதி பில்டர்ஸ், நகராட்சி ஒப்பந்ததாரர், வாலாஜாபேட்டை அவர்களின் மதிப்பீட்டைவிட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>ந.க.எண்:-2684/2017/இ1.</u>

11. இந்நகராட்சியில் சொத்துவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி, குத்தகை மற்றும் வரியில்லா இனங்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், தொழில் உரிமங்கள் உள்ளிட்ட அனைத்து செயல்முறைகளும் Centralized Web Based Software Application மூலம் (Urban Tree Information System (UTIS) Software ) ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கண்ட பணிகள் அனைத்தும் கனிணி மூலம் நடைபெற்று வருகிறது. மேலும் இவ்வலுவலகத்தில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அனைத்து உபகரணங்களும் குறைந்த அளவில் உள்ளதால் பணிகளை உடனுக்குடன் மேற்கொள்வதில் சிரமமாக உள்ளது. இக்குறைகளை களையும் பொருட்டு கீழ்கண்டுள்ள விவரப்படி கனிணி மற்றும் அதனை சார்ந்த உபகரணங்களை புதியதாக வாங்கி கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் இப்பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவீனத் தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

| S.No | Name of the Materials | Nos |
|---|---|---|
| 1 | All-in-One-Desktop Computer | 6 |
| 2 | Laser Printer | 3 |
| 3 | Duplex Laser Printer | 2 |
| 4 | LaserJet Printer | 6 |
| 5 | Dot Matrix Printer | 1 |
| 6 | K7 Security Antivirus | 15 |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2017-18ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்:-0353/2018/இ1.</u>

12. இந்நகராட்சியில் சொத்துவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி, குத்தகை மற்றும் வரியில்லா இனங்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், தொழில் உரிமங்கள் உள்ளிட்ட அனைத்து செயல்முறைகளும் Centralized Web Based Software Application மூலம் (Urban Tree Information System (UTIS) Software ) ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கண்ட பணிகள் அனைத்தும் கனிணி மூலம் நடைபெற்று வருகிறது. மேலும் இவ்வலுவலகத்தில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும் போது சிலநேரங்களில் மின்இணைப்பு துண்டிக்கப்படுவதால் கனிணிகள் பழுதாகிவிடுகிறது. எனவே, அலுவலகத்தில் உள்ள 5Kva UPS-ை பழுது செய்து உபயோகத்திற்கு கொண்டுவரவும் மற்றும் கீழ்கண்டுள்ள விவரப்படி UPS மற்றும் அதனை சார்ந்த உபகரணங்களை புதியதாக வாங்கி கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் இப்பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவீனத் தொகை ரூ.6.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

| S.No | Name of the Materials | Nos |
|---|---|---|
| 1 | 10 Kva Online UPS | 01 |
| 2 | 100 AH Battery | 16 |
| 3 | 60 AH Battery | 16 |
| 4 | Wiring Work for 10 Kva Line & 5 Kva Ups Repair and Wiring Line | 01 |
| 5 | 10/100/1000 MBPS 24 Port Ethernet Switch | 01 |

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2017-18ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:-0354/2018/இ1.

13. மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ2/0735/2017, நாள்.09.01.2018-ல் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் தொகை ரூ.5.50 இலட்சம் மதீப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06ல் ஏகாம்பரநாதர் கோயில் குளக்கரை மழைநீர்வடிகால்வாய் மற்றும் கல்வெர்ட் அமைக்கும் பணிக்கு 30.01.2018-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சாரதி பில்டர்ஸ்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை, | 0.06%<br>(மதிப்பீடு விகிதத்தை விட குறைவு) |
| 2. | திரு.R.பாஸ்கரன்<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை, | 0.57%<br>(மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்) |

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்:1ல் உள்ள ஸ்ரீ சாரதி பில்டர்ஸ், நகராட்சி ஒப்பந்ததாரர், வாலாஜாபேட்டை அவர்களின் மதிப்பீட்டைவிட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்:-3075/2017/இ1.

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.